# 'டிஜிட்டல் பாதுகாப்பு' – வங்கிகள் உஷார்

## தோகா வங்கி சிஇஓ சீதாராமன் பேச்சு

'டிஜிட்டல் பாதுகாப்பு' தொடர்பாக வரும் சவால்களை எதிர்கொள்ள வங்கிகள் தயாராக இருக்க வேண்டும் என்று கத்தார் நாட்டின் தோகா வங்கி முதன்மை செயல் அதிகாரி (சிஇஓ) சீதாராமன் பேசினார்.

தோகாவில் நடந்த விழாவில் இது குறித்து அவர் மேலும் பேசியதாவது: 'வங்கி அல்லது எண்ணை நிறுவனம் எதுவாக இருந்தாலும் ஒரு நாட்டின் நிலையான வளர்ச்சிக்கு சரியான முறையில் தங்களுடைய பங்களிப்பை அளிக்க வேண்டும். உலக அளவில் பல நிறுவனங்கள் நிதி நெருக்கடியால் பாதிப்படைந்து வருவதால் தொழில்துறையில் நிலவும் பிரச்னையை வலுப்படுத்த வாய்ப்புள்ளது.

உலக அளவில் பொருளாதார வளர்ச்சி என்பது இன்னும் முன்னேற்றம் அடையாமல் உள்ளது. எனவே ஜி20 நாடுகள் உலக பொருளாதார வளர்ச்சியை அடுத்த 5 ஆண்டுகளில் 2.1 சதவீதம் அதிகரிக்க திட்டமிட்டுள்ளன. ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களிடையே நிலவும் இடைவெளியை அடுத்த 10 ஆண்டுகளில் 25 சதவீதம் குறைக்க ஜி20 நாடுகள் திட்டமிட்டுள்ளன. இதன் மூலம் சர்வதேச அளவில் 10 கோடி பெண் தொழிலாளர்களை கொண்டு வர சாத்தியம் உள்ளது.

சமீபத்தில், அன்னிய செலாவணி மோசடி போன்ற பல்வேறு காரணங்களால் உலகளாவிய வங்கிகள் பாதிக்கப்பட்டன. இதுபோன்ற நிகழ்வுகள் மீண்டும் ஏற்படாத வகையில் வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்கள் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.



சீதாராமன்

இப்போது, நாம் டிஜிட்டல் உலகில் வாழ்ந்து வருகிறோம். அனைத்து வங்கிகளும் தமது வாடிக்கையாளர்களுக்கு டிஜிட்டல் தொழில்நுட்பத்தை வழங்கி வருகின்றன. அதே நேரத்தில் டிஜிட்டல் பாதுகாப்பு தொடர்பாக வரும் சவால்களையும் வங்கிகள் எதிர்கொள்ள வேண்டும்.'

இவ்வாறு அவர் பேசினார்.